<u>**தட்டைப்பயிறு**</u>

1.வேரழுகல் மற்றும் நாற்றழுகல் : பிந்தியம்,ரைக்டோனியா, மைக்ரோபோமினா

2.தென் கருகல் : <u>**ஸ்கிலிரோசியம் ரால்ஃசி**</u>

3.தட்டைப்பயிறு தேமல் நோய் : வைரஸ்

4.ப்யூசேரியம் வாடல் நோய்: <u>**ப்யூசேரியம் ஆக்ஸிஸ்போரம்**</u>

5.வேரழுகல் மற்றும் நாற்றழுகல் : பித்தியம், ரைசக்டோனியா,மேக்ரோபோமினா

**அறிகுறிகள்:**

1.அறிகுறிகள் ஒவ்வொரு இடத்திற்கும், செடிக்கும் வேறுபடுகின்றன, இளம் செடிகள் அதிகமாக இந்நோயினால் இறந்துவிடுகின்றன.

2.ஆணிவேரின் நிறம் மாறுகின்றது, தண்டில் பிளவு ஏற்படுகிறது, செடிகள் குட்டையாகவும், வாடியும் குறைந்த மகசூலையும் கொடுக்கின்றன.

3.முதல் இலை வருவதற்கு முன் தோன்றும் பருவநிலைகளிலும் நாற்றுகள் அடர்ந்த நிலையில் இருப்பதாலும் இந்நோய் (நாற்றழுகல்) தோன்றுகிறது.

**2.தென் கருகல் : ஸ்கிலிரோசியம் ரால்ப்சி**

**அறிகுறிகள்:**

1. தட்டைப்பயிரின் வேரையும், தண்டையும் தாக்கும் ஒருவகை பூசணம் இந்நோயை பரப்புகிறது.

2. செடியின் கீழ் உள்ள இலைகள், மஞ்சளாகவும், வாடியும் காணப்படும்.

3. தண்டில் பழுப்பு நிற நிறமாற்றம் ஏற்பட்டு இவை மண்தளத்திற்கு மேல் சற்று பரவியிருக்கும்.
4. செடிகள் சிறிது நாட்களில் இறந்துவிடும்.
5. தண்டில் வெள்ளை நிற பூசணம் வளர்ந்து அதில் வட்டவடிவ பழுப்புநிற கடுகு போல் ஸ்கிலிரோசியா உண்டாகும்.

**3.தட்டைப்பயிறுதேமல் நோய் : வைரஸ்**

**அறிகுறிகள்:**

1. வெவ்வேறு வகை வைரஸ்கள் தட்டைப்பயிரை பாதிக்கின்றன. இந்நோயினால் இலைகளில் லேசான பச்சை மற்றும் அடர்ந்த பச்சை நிறம் மாறிமாறி காணப்படுகிறது.
2. பாதிக்கப்பட்ட இலைகள் ஒழுங்கற்ற வடிவில் காணப்படுகின்றன.
3. பாதிக்கப்பட்ட இலைகள் சிறியதாகவும், நெளிந்தும் காணப்படுகிறது.
4. பாதிக்கப்பட்ட செடிகள், குட்டையாகவும், அடர்ந்த தோற்றத்துடனும், காய்கள் ஒழுங்கற்ற வடிவிலும் மகசூல் குறைந்தும் காணப்படுகிறது.
5. ப்யூசேரியம் வாடல் நோய் : **ப்யூசேரியம் ஆக்ஸிஸ்போரம்**

**4.ப்யூசேரியம் வாடல் நோய் : ப்யூசேரியம் ஆக்ஸிஸ்போரம்**

அறிகுறிகள்:

1. செடியின் கீழ் உள்ள இலைகள் வாடியும் ஒரு பகுதி மஞ்சள் நிறத்தில் மாறியும் இருக்கும்.

2. பாதிக்கப்பட்ட இலைகள் வளர்ச்சி குன்றியும் வாடியும் காணப்படும்.

3. தண்டுப் பகுதியை பிளந்து பார்த்தால் சிவப்பு நிற திசு காணப்படும்.

<u>கட்டுப்பாடு :</u>

1. தரமான நல்ல விதைகளை பூசணக்கொல்லியுடன் நேர்த்தி செய்ய வேண்டும்.

2. நான்கு முதல் ஐந்து வருடன் பயிர் சுழற்சி முறையை பயன்படுத்தவேண்டும்.

3. தென் கருகல் நோயைக் கட்டுப்படுத்த முந்திய பயிரின் கழிவுகளை 6 இன்ச் அடி ஆழத்திற்கு மண்ணில் புதைக்க வேண்டும்.

4. சான்றளிக்கப்பட்ட தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும்

5. களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

6. வைரஸ் நோய் பாதிக்கப்பட்ட செடிகளை அகற்ற வேண்டும்.

7. மோனோகுரோட்டபாஸ் 0.1 சதவிகிதம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

8. நோய் எதிர்ப்புச் சக்தியுள்ள செடிகளை பயன்படுத்தவில்லையென்றால் நூற்புழுக்களை கட்டுப்படுத்த வேண்டும். ஏனென்றால் செடியில் ப்யூசேரியம் வாடல் நோயை நூற்புழு அதிகப்படுத்துகிறது.